# செய்திகுறிப்பு
## மின்துறை புதுவை

புதுவை யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட புதுவை, காரைக்கால், மாஹே, யானம் பகுதிகளில் கடந்த சில நாட்களாக வெப்பத்தின் தாக்கம் மிகவும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், அலுவவகங்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் ஏசி(குளிர்சாதன) பயன்பாடு மிக அதிகமாக உயர்ந்துள்ளது. ஒரே சமயத்தில் அனைத்து மின் நுகர்வோரும் ஏசி சாதனங்களை பயன்படுத்துவதால் மாநிலத்தின் மின் நுகர்வு உச்சத்தை எட்டுவதால் மின்சுமை அதிகரிப்பதோடு ஆங்காங்கே பல இடங்களில் மின் அழுத்த குறைபாடு ஏற்படுகிறது. மேலும், மின் பாதை இணைப்பு துண்டிக்கப்பட்டு மின்தடை ஏற்பட வழிவகுக்கிறது.

மிக குறைந்த வெப்ப அளவில்(26டிகிரிக்குக் கீழே) ஏசி சாதனங்களை உபயோகிப்பதால் மின் நுகர்வோரின் கட்டணம் அதிகரிப்பதோடு ஒட்டுமொத்த புதுவையின் மின் தேவை அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே அதிக மின் நுகர்வை தவிர்க்க வீடுகள், கடைகள், தொழிற்துறை நிறுவனங்கள், அலுவலகங்களில் ஏசி சாதனங்களின் வெப்ப அளவை 26டிகிரி செல்ஷியஸ் அல்லது அதற்கு அதிகமாக செட் செய்து மின் பயன்பாட்டை குறைத்தக் கொள்ள வேண்டும். ஏசியின் வெப்ப அளவை உயர்த்துவதன் மூலம் ஒவ்வொரு டிகிரிக்கும் 6% வரை மின்சாரம் சேமிக்கப்படும் என மத்திய அரசின் பியூரோ ஆ.ஃப் எனர்ஜி எ.ஃபிஷியன்சியின்(பிஇஇ) ஆணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பெரிய கடைகள், வணிக நிறுவனங்கள் தங்களின் ஏசி சாதனங்களின் பயன்பாட்டை மாலை 06.00 முதல் இரவு 12.00 மணி வரை குறைக்க வேண்டும் என்று மின்துறையால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அனைத்து தரப்பு மின் நுகர்வோரும் வெப்பத்தின் தாக்கம் தணியும் வரையில் மேற்கண்ட நடவடிக்கைகளை கடைபிடித்து மின்துறையோடு ஒத்துழைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

T. சண்முகம்

4/8/22

(த. சண்முகம்)
கண்காணிப்பு பொறியாளர்-மற்றும்-துறைத்தலைவர்

Press Notice
Electricity Department
Puducherry

For the past few days all the regions of the U.T. of Puducherry viz Puducherry, Karaikal, Mahe & Yanam are experiencing extremely hot weather conditions. Due to the severe rise in temperature, there has been a drastic increase in the usage of a/c loads in houses, shops, industries, offices and commercial establishments. Since all the a/c loads are being switched on simultaneously by all categories of consumers, the power demand of entire U.T. of Pondicherry has reached the maximum level. As a result, the burden on the electrical infrastructure has increased and low voltage problem rises in several places. This has also led to frequent snapping of conductors/ electrical lines.

By using airconditions below the 26 degree thermo setting, there may be abnormal rise in the consumption of electricity and in the bill amount. Further, the total power demand of U.T. of Puducherry shall become enormous. Hence in order to reduce the power demand the thermosetting of airconditions installed in houses, shops, industries, offices and commercial establishments may be set at 26 degree Celsius or at higher temperature levels. By increasing the thermosetting of airconditioing units, energy savings upto 6% can be achieved as per the guidelines issued by the Bureau of Energy Efficiency(BEE) of Government of India.

Further, major shops and commercial establishments are requested to reduce their a/c loads during evening peak hours from 06.00PM to 12.00PM. All categories of electricity consumers are requested to follow the above measures and extend their kind co-operation to the Electricity Department, Puducherry, till there is improvement/reprieve from the extremely hot weather conditions.

4/9/22

(T. CHANEMOUGAM)
SUPERINTENDING ENGINEER-cum-HoD